## தலைப்பு 310 – அரசாங்க தொழிற்சாலை திணைக்களம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வருமானம் அல்லாத பெறுவனவு**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஒன்றிணைந்த பரீட்சை மீதி மற்றும் ஏசீஏ 3 படிவத்தில் திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டுநிதி அளவு ரூபா 267,582,744 ஆக இருந்த போதிலும் நிதிச் செயலாற்றல் கூற்றில் திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டுநிதியாக ரூபா 570,453,873 காண்பிக்கப்பட்டமையால் ரூபா 302,871,129 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் வருடங்களின் போது நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கும் போது இந்த வழுக்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திறைசேரியிலிருந் தான பெறுவனவுகள் சரியான பிரகாரம் இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ii) | ACA3 இன் பிரகாரம் ஏனைய நிதி மூலங்களிலிருந்து கிடைத்த கட்டுநிதி பெறுமதியான ரூபா 323,443,439 தொகை திறைசேரி அனுப்புதலாக நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | வழுக்கள் எதிர்வரும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திறைசேரி அனுப்புதல்கள் சரியாக இனங்கண்டு நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்குதல் வேண்டும். |
| (iii) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிச் செயலாற்றல் கூற்றின் இறுதி கட்டுமீதி, கட்டுநிதி இணக்கக் கூற்றின் பிரகாரமான மீதி மற்றும் ACA 03 இன் பிரகாரம் ஆண்டின் இறுதியில் கட்டுநிதி மீதியின் | எதிர்வரும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021/03 அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் கட்டுநிதி மீதி சரியாக பதியப்படல் வேண்டும். |

கூட்டுத்தொகைக்கு சமனாக இருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு சமனாக இல்லாதிருந்ததுடன் வேறுபாடு ரூபா 20,894,810 ஆகும்.

**(ஆ) களஞ்சிய முற்பணக் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வின் கணிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் விநியோகிக்கப்பட்ட இருப்புக்களின் கிரயம் ரூபா 160,397,852 ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இருப்பு விநியோகித்தல் பெறுமதி ரூபா 159,042,692 ஆனமையால் மீளாய்வாண்டில் இருப்பு விநியோகித்தல் கிரயம் ரூபா 1,355,160 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வருடாந்த இருப்பு மெய்மையாய்வு செயற்பாட்டின் போது இருப்பு பதிவழித்தல் மற்றும் களஞ்சியம் தவிர ஏனைய பிரிவுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட காகிதாகிகள் விநியோகித்தல் கிரயமிடப்படாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் இந்த இரண்டு பெறுமதிகளுக்கிடையில் வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | இருப்பை சரியாக கணிப்பிட்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

**(இ) ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (i) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் சொத்தொன்று அதன் கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு இழிவுப் பெறுமதியில் பெறுமதியிடப்பட வேண்டிய போதிலும் செய்யப்பட்ட வேலை முற்பணக் கணக்கில் நடைமுறையல்லா சொத்துக்கள் அதன் | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது நிதி நிலைமைக் கூற்றில் சொத்துக்கள் அதன் கிரயத்தில் திரண்ட பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிரயத்தில் பெறுமதியிடப்பட்டு நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் திரண்ட பெறுமானத்தேய்வு தனியாக தேறிய சொத்து உரித்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் மீளாய்வாண்டு காலப்பகுதியில் ஆரம்ப பெறுமானத்தேய்வு காலப்பகுதிக்கான பெறுமானத்தேய்வு மற்றும் இறுதி திரண்ட பெறுமானத்தேய்வு நிதிக் கூற்றுக்களில் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டு காலப்பகுதிக்குரிய ஆரம்ப பெறுமானத்தேய்வு மற்றும் இறுதி திரண்ட பெறுமானத்தேய்வு உரிமை மாற்றங்கள் கூற்றில் திரண்ட பெறுமானத்தேய்வு நிரலில் தனியாக காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 460,155 தொகையான பழைய இயந்திரங்கள் மற்றும் பொறிகளின் கிரயம் தொடர்ச்சியாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அவை பாவனையில் இல்லையாயின் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கோ அல்லது பாவனையில் உள்ளதாயின் ஆயுட்காலத்தை கணிப்பிட்டு மீண்டும் சரியான முறையில் கணக்குகளில் காண்பிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இயந்திர கணக்கு (பழைய) தொடர்பாக எங்களிடம் காணப்படுகின்ற கோவைகளில் விரிவான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் அதற்காக எதிர்காலத்தில் பொருத்தமான வழிமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளபடியாக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | ரூபா 24,032,253 பெறுமானத்தேய்வு நிதியம், திணைக்களத்தால் வெளியே முதலீடு செய்யப்படாதிருந்ததுடன் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது | பெறுமானத்தேய்வு நிதிய முதலீட்டு கணக்கில் அடங்கியுள்ள பணத்தை எதிர்காலத்தில் சரியாக புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளபடியாக காணப்படுகின்ற சொத்துக்களை சரியான பிரகாரம் இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அரச வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. எனினும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமைக் கூற்றில் அது முதலீடொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நடைமுறையல்லா சொத்துக் கூற்றில் ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 278,401,997 ஆக இருந்த போதிலும் ACA6 படிவத்தில் அப்பெறுமதி ரூபா 278,543,675 ஆக குறிப்பிடப்பட்டமையின் காரணமாக ரூபா 141,738 முரணொன்று அவதானிக்கப்பட்டது. | இந்த பெறுமதியை சரிசெய்வதற்காக அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | முரண்களை இனங்கண்டு சரிசெய்தல் வேண்டும். |
| (ii) | அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்பட்ட கட்டிடங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 327,400,000 ஆக இருந்ததுடன் (ACA-6) மாதிரியில் அதன் பெறுமதி ரூபா 387,400,000 ஆனமையால் ரூபா 60,000,000 முரணொன்று அவதானிக்கப்பட்டது. | அந்தத் தகவல்கள் நாளதுவரையாக்கப் படாதிருந்ததுடன் எதிர்வரும் ஆண்டின் போது கணக்குகளை சமர்ப்பிக்கும் போது அந்த தகவல்களை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பீட்டுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |

**1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகனப் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | இந்த ஆண்டு முதல் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் முறையாகவும், நாளதுவரையாகவும் பேணிச் செல்லல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 1,682,924 ஆன பெறுமானத்தேய்வு நிதியம் ரூபா 100,738,529 ஆக களஞ்சிய முற்பண இருப்புக் கணக்கு மற்றும் ரூபா 53,161,909 பெறுமதியான பதிவழிக்கப்பட்ட கடன்பட்டோர் தொடர்பான விரிவான பட்டோலை என்பன கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களின் மீதிகளுக்காக உரிய விரிவான பட்டோலைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ii) | ரூபா 574,461,205 தொகையான ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கடன் கணக்கில் ரூபா 519,373,709 இற்காக மாத்திரம் பட்டோலை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 55,087,507 கடன்பட்டோருக்காக பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் பட்டோலைகளில் இந்த மீதியை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களின் மீதிகளுக்காக உரிய விரிவான பட்டோலைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (iii) | 2020 ஆம் ஆண்டிற்குரிய பொருள் அகற்றல் பெறுமதி, ஏலமிடப்பட்ட பெறுமதி மற்றும் பொருள் அழிவடையச் செய்வதற்குரிய எழுத்து மூல சான்றுகள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்குரிய ஏலமிடுவதற்கு பரிந்துரை செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் காணப்படாதிருந்ததுடன் அழிவடையச் செய்வதற்கு உட்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படும். | உரிய எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iv) தபால் திணைக்களத்தின் போக்குவரத்து பிரிவிற்காக தற்காலிக கட்டிடமொன்றை நிர்மாணித்தல்<br>--------------------------------------------<br>இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 120,175,000 ஆன மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தில் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தபால் திணைக்களம் இணங்கி 2020 மார்ச் 06 ஆந் திகதி வரையில் ரூபா 22,199,572 செலுத்தப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தில் எந்தவொரு செயல் முன்னேற்றமும் காணப்படாதிருந்ததுடன் அறவிடப்பட்ட இந்த பணம் எந்த செயல்பாடுகளில் ஈடுபடுத்தப்படுகின்றது என்பது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த பணிகளுக்காக ஆரம்பத் திட்டத்தின் பிரகாரம் 03 மாடிகளையுடைய கட்டிடமொன்று கொழும்பு கோட்டை பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு உடன்படிக்கை கைச்சாத்திட்டு ரூபா 22,199,572.00 முற்பணத் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. புதிய திட்டம் மற்றும் மதிப்பீட்டை கட்டடத் திணைக்களத்திலிருந்து பெற்று 2022 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களின் மீதிகளுக்காக உரிய விபரங்கள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 ஆற்றப்பட்ட வேலை முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 5 - 20 வருடங்கள் வரை தீர்க்கப்படாத கடன்பட்டோர் மீதி ரூபா 241,984,958 ஆக இருந்ததுடன் விபரங்கள் சமர்ப்பிக்கப்படாத கடன்பட்டோர் மீதி ரூபா 55,087,495 ஆகும். 05 வருடங்களுக்கு குறைவாக தீர்த்து வைக்கப்படாத கடன்பட்டோர் மீதியும் கவனத்தில் கொள்ள வேண்டிய மட்டத்தில் காணப்படுவதுடன் கடன்பட்டோர் மீதியை தீர்த்து வைப்பதில் மிகவும் மந்த நிலையும் காணப்பட்டது. | 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் உரிய கடன்பட்டோர் மீதிக்காக 2021 இல் ஆற்றிய வேலை முற்பணக் கணக்கின் மூலம் ஐயக் கடன் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் கிராமிய வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சிலிருந்து அந்த கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. மேலும் | கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இந்த கடன் மீதியை அறவிடுவதற்காக உரிய கடன்பட்டோருக்கு எழுத்துமூலம் ஒவ்வொரு வருடமும் அறிவிக்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டில் இதுவரையில் கடன்பட்டோரிடமிருந்து ரூபா 58,181,072.53 தொகை அறவிடப்பட்டுள்ளது. | |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து பெறுவதற்கு இருந்த ரூபா 142,650 கடன் பணம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்ட போதும் அவரை வழக்கிற்கு அழைப்பதற்காக அவரின் முகவரியை கண்டறிய முடியாதிருந்ததாக சட்டமா அதிபர் ஊடாக நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 415,430 கடன் தொகை வேலையை விட்டுச் சென்ற 11 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடுவதற்கு இருந்தது. | கடனை அறவிடாமைக்கான காரணமாக வழக்கு தொடர்தல், பொலிசில் எழுத்துமூல முறைப்பாடு செய்தல், தவணைப் பணமாக செலுத்துதல் மற்றும் பதிவழிப்பதற்கான அங்கீகாரம் கோரலாக காண்பிக்கப்படுகின்றது. | கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.3 எல்லையை விஞ்சியமை**

---

அரசாங்கத்தின் முற்பண பணிகளுக்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லையை விஞ்சியமை மற்றும் அடையாமை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கில் பெறுவனவுகளின் அங்கீகரிக்கப்பட்ட ஆகக்குறைந்த செலவு எல்லை ரூபா 440,000,000 முதல் ரூபா 340,000,000 வரை குறைப்பதற்கு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக 2022 சனவரி 12 ஆந் திகதி அனுப்பப்பட்டிருந்த போதிலும் இதுவரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | இதற்குரிய அமைச்சரவை பத்திரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரதி இதனுடன் சமர்ப்பிக்கப்படும். | எல்லைக்கு இணங்குகின்ற வகையில் கண்காணித்துக் கொள்ளல் வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| (i) XIX அத்தியாயத்தின் 4.3.3 ஆம் பிரிவு | வீட்டு விண்ணப்பங்கள் கிடைத்தவுடன் வீடுகளை ஒதுக்கும் அதிகாரத் தரப்பினரால் காத்திருத்தல் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | தாபன பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனையின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது. | விண்ணப்பங்கள் கிடைத்தவுடன் காத்திருத்தல் பட்டியலில் உள்ளடக்குதல் வேண்டும். |
| (ii) XIX அத்தியாயத்தின் 4.3.4 ஆம் பிரிவு | ஒவ்வொரு வீட்டின் தரங்களுக்காகவும் தனித்தனியாக காத்திருத்தல் பட்டியல் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை | ஒவ்வொரு சேவைகளுக்காகவும் தனித்தனியாக காத்திருத்தல் பட்டியல் உள்ளடக்கிய கோவை பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் இந்த ஆண்டின் சனவரி மாதம் முதல் | ஒவ்வொரு வீட்டின் தரங்களுக்காகவும் தனித்தனியான காத்திருத்தல் பட்டியல் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தனித்தனியான பதிவேடுகளும் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகைகள் முகவராண்மை சுற்றறிக்கை<br><br>2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவை<br>-------------------------- | | | |
| (i) | 8.9.1(ஆ) பிரிவு | ரூபா 500,000 இனை விஞ்சுகின்ற பொருட்களின் ஒப்பந்தத்திற்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதி கையொப்பமிடப்பட்டிருக்க வில்லை. | தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை விரைவாக கொள்வனவு வேண்டியிருந்ததனாலும், தேவையான மாதிரிகளின் பிரகாரம் மற்றும் தேவையான தரத்துடன் வழங்க வேண்டியிருந்தமையாலு ம் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு ஆர்வம் காண்பிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 5.4.10(இ) பிரிவு | மதிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்த தொகையில் பத்து சதவீதத்திற்கு குறையாத பொருத்தமான தொகையொன்றில் செயலாற்றல் காப்பீடு பெறப்பட்டிருக்கவில்லை. | பொருட்கள் தாமதமின்றி தேவையான நியமத்துடனும், தரத்துடனும் வழங்கும் போது செயலாற்றல் பிணை முறி பெறப்பட்டு முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) 2020 ஒக்தோபர் 02 ஆந் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை 05/2020 03 ஆம் பந்தி | பழுதுபார்க்கப்பட்ட வாகனங்கள் தொடர்பான தகவல்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்காக 2021 சனவரி 15 ஆந் திகதிக்கு முன்னர் கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென குறிப்பிடுகின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.5 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் களஞ்சிய முற்பணக் கணக்கிற்குரிய ரூபா 78,175,586 ஆன தீர்த்து வைக்கப்படாத கடன்கொடுத்தோர் மீதி காணப்பட்டதுடன் அதில் ரூபா 294,737 தொகை 02 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான மீதியாகும். | தீர்த்து வைக்கப்படாத கடன்கொடுத்தோர் மீதி தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் அக்கடன்கொடுத்தோர் மீதியை எதிர்காலத்தில் தீர்த்து வைக்கப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம். | பொறுப்புக்கள் சரியான பிரகாரம் தீர்த்து வைக்கப்படுவதை கண்காணித்தல் வேண்டும். |

## 2.6 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்து வைக்கப்படாத கேள்வி வைப்பு மீதி ரூபா 642,785 ஆகும். | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்து வைக்கப்படாத கேள்வி வைப்பு மீதிக்காக உரிய நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்பி அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு | தீர்த்து வைக்க முடியுமான வைப்பு மீதிகளை இனங்கண்டு தீர்த்து வைத்தல் வேண்டும். |

வைப்பதற்குத்
தேவையான
நடவடிக்கைகள்
எடுக்கப்படுகின்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மத்திய கலாசார நிதியத்திலிருந்து ரூபா 29,991,987 பெறுமதியான விளக்கு தூண்கள் பெற்றுக் கொள்ளும் செயற்திட்டம் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது. | பணிகளுக்காக உடன்படிக்கை செய்வதற்கு கோரியிருந்த போதிலும் உடன்படிக்கை கைச்சாத்திடாமையால் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தை சரியான காலப்பகுதியில் அமுல்படுத்து வதற்கும் உரிய செயலாற்றலை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தபால் திணைக்களத்தின் தின முத்திரை 2000 ஐ பழுதுபார்த்தல் ரூபா 1,640,000 பெறுமதியான செயற்திட்டம் திட்டமிடப்பட்ட பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | 2000 தபால் முத்திரைகளை பழுதுபார்க்கும் பணிகள் கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக தாமதமடைந்திருந்தது. அது 2022 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படுகின்றது. | செயற்திட்டத்தை உரிய காலப்பகுதியில் அமுல்படுத்து வதற்கும், உரிய செயலாற்றலை கைப்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மஹரகம அபெக்ஷா வைத்தியசாலையில் வைத்தியசாலை உபகரணங்களை தயாரித்தல் ரூபா 2,163,000 பெறுமதியான செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | கொவிட் தொற்றுநோய்க்கிடையே ஊழியர்களின் வருகை மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டமையாலும், மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதிலுள்ள வசதியீனத்தின் காரணமாகவும் 2021 ஆம் ஆண்டின் செயலாற்றலை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை உரிய காலப்பகுதியில் அமுல்படுத்து வதற்கும், உரிய செயலாற்றலை கைப்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபையின் ஹப்புகள நீர் வழங்கல் முறைமையை வழங்கி பொருத்துதல் ரூபா 231,578,258 பெறுமதியான செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | தேவையான மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் நியமமின்றி மூலப்பொருட்கள் கிடைத்தமையின் காரணமாக பல சந்தர்ப்பங்களில் அவை நிராகரிக்கப்பட்டிருந்தது. அதனால் இதுவரை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. 2022 ஆம் ஆண்டின் போது நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மூலப்பொருட்களின் விலைகள் கணிசமான விலையில் உயர்வடைந்தமையின் காரணமாக தாங்கி முறைமை 4 இல் 3 மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்த துடன் அது தொடர்பாக நீர்வழங்கல் சபைக்கும் அறிவிக்கப்பட்டு தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | செயற்திட்டத்தை உரிய காலப்பகுதியில் அமுல்படுத்து வதற்கும், உரிய செயலாற்றலை கைப்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பத்தேகம நீர் வழங்கல் முறைமை தயாரித்தல் ரூபா 159,024,118 தொகையான செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | இந்த செயற்திட்டத்திற்காக இறக்குமதி செய்யப்பட்டு வழங்கப்பட்ட சகல மூலப்பொருட்களும் நியமத்திற்கு புறம்பானமையின் காரணமாக பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. மேலும் டொலர் உயர்வடைந்து சென்றமையின் காரணமாக புதிய விலைகள் மிகவும் அதிகமாக இருந்தமையால் பணிகளின் மதிப்பீடு ரூபா 159 மில்லியன், ரூபா 350 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. அது தொடர்பாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு அறிவித்து | செயற்திட்டத்தை உரிய காலப்பகுதியில் அமுல்படுத்து வதற்கும், உரிய செயலாற்றலை கைப்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அங்கீகாரத்திற்காக எதிர்பார்த்துள்ளோம். | |
| (ஊ) | இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் ஒலியமுல்ல பம்பிக் கூடத்திற்கு 06 வாயிற் கதவுகள் வழங்குதல் ரூபா 114,376,100 பெறுமதியான செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | மூலப்பொருட்கள் பெற்றுக் கொள்வதில் இந்தப் பணிகளும் தாமதமடைந்திருந்தது. இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி மாற்று மூலப்பொருட்களை ஈடுபடுத்தும் பணிகள் 2022 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செயற்திட்டத்தை உரிய காலப்பகுதியில் அமுல்படுத்து வதற்கும், உரிய செயலாற்றலை கைப்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் லுணுகம்வெஹற தேசிய பூங்காவில் இரும்பு பாலம் அமைத்தல் ரூபா 53,463,000 பெறுமதியான செயற்திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது. | திட்டத்தின் பிரகாரம் மூலப்பொருட்கள் கொள்வனவு செய்யும் போது மூலப்பொருட்களின் விலைகள் உயர்வடைந்து சென்றமையின் காரணமாக மதிப்பீட்டு விலையை திருத்தி அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட போதும் அதற்கான அங்கீகாரம் கிடைக்காமையின் காரணமாக பணிகளை கைவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. | செயற்திட்டத்தை உரிய காலப்பகுதியில் அமுல்படுத்து வதற்கும், உரிய செயலாற்றலை கைப்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அலிகொட்டஆர செயற்திட்டத்தின் நீர் கட்டுப்பாட்டு மூன்று கதவினை அமைப்பதற்காக ரூபா 05 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதி மற்றும் பௌதீக செயல்முன்னேற்றம் 26 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக நிர்மாணங்கள் தாமதமடைந்திருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை உரிய காலப்பகுதியில் அமுல்படுத்து வதற்கும், உரிய செயலாற்றலை கைப்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தபால் திணைக்களத்திற்காக இரும்பு சட்டகம் மற்றும் துண்டுகளை பயன்படுத்தி அலுவலக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 32 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் நிதிசார் செயல்முன்னேற்றம் 13.1 சதவீதமும் பௌதீக செயல்முன்னேற்றம் 41 சதவீதமும் ஆக காணப்பட்டது. | இதன் ஆரம்பத் திட்டம் 03 மாடிகளையுடைய கட்டிடம் பின்னர் ஒரு மாடியாக மாற்றப்பட்டதன் காரணமாக பணிகள் இடைநடுவில் நிறுத்த வேண்டியேற்பட்டது. எனினும் காணியைச் சுற்றி மதில் நிர்மாணித்தல் முன்பக்க வேலியை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனால் பௌதீக செயல்முன்னேற்றம் குறைவடைந்துள்ளது. | செயற்திட்டத்தை உரிய காலப்பகுதியில் அமுல்படுத்துவதற்கும், உரிய செயலாற்றலை கைப்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்காக நீர் சுத்திகரிக்கும் தாங்கியை அமைத்து பொருத்துவதற்காக ரூபா 80 மில்லியன் இலக்கிடப்பட்ட நிதியேற்பாட்டில் மீளாய்வாண்டின் போது ரூபா 10 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டு அடையப்பட்ட பௌதீக செயல்முன்னேற்றம் 13 சதவீதமாக மாத்திரம் இருந்தது. | தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஹப்புகள நீர் சுத்திகரிப்பு தாங்கி நிர்மாணிப்பதற்காக தேவையான மூலப் பொருட்களை (வெள்ளை இரும்பு) கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும் நியமத்திற்கு புறம்பான மூலப்பொருட்கள் கிடைத்தமையின் காரணமாக பல சந்தர்ப்பங்களில் அவை நிராகரிக்கப்பட்டிருந்தன. அதனால் பௌதீக செயல்முன்னேற்றம் குறைவாக காணப்பட்டது. | செயற்திட்டத்தை உரிய காலப்பகுதியில் அமுல்படுத்துவதற்கும், உரிய செயலாற்றலை கைப்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்<br>பின்வரும் காணிகள் மற்றும் கட்டிடங்கள் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | உடைத்து அகற்றப்பட்ட பழைய வேலைத்தள இலக்கம் 07 காணப்படுகின்ற நிலம் | இந்த பகுதியில் 2023 ஆம் ஆண்டில் வாகன இலக்க தகடு அச்சிடுவதற்காக கட்டிடமொன்றை அமைப்பதற்கான தேவையான செயற்திட்ட திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. தற்போது வாகனம் நிறுத்துவதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | இந்த சொத்துக்களை இனங்கண்டு பயன்பாட்டிற்கு எடுப்பதுடன் தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மெண்டிஸ்வத்தே 03 ஊழியர் வீடுகள் அமைந்துள்ள காணி 01 ஏக்கர் 03 றூட் 11 பேர்ச் மிகுதி நிலப் பிரதேசம் | இந்த உத்தியோகத்தர் இல்லங்களில் கேவத்த மற்றும் நுழைவு வீதியுடன் ஒரு பகுதி இவ்வாறு இனங்காணப்பட்டுள்ளது. | இந்த சொத்துக்களை இனங்கண்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | திணைக்களத்திற்குரிய 30 உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்படுத்தப்படாமல் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது. | இந்த உத்தியோகபூர்வ இல்லங்கள் அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் தேவையின் பிரகாரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் கோரிக்கையின் பிரகாரம் அந்த இல்லங்களை ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | இந்த சொத்துக்களை இனங்கண்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தால் பயன்படுத்தப்படுகின்ற 03 காணிகளுக்கான உரித்துறுதிகள் திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்படாதிருந்ததுடன் நில அளவையாளர் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பிரதேச செயலாளரின் ஊடாக உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022.04.04 ஆந் திகதி முதல் நிலஅளவையாளர் திணைக்களத்தின் மூலம் அளவிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அது பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் கையளித்தல் ஆவணத்தை பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | இந்த சொத்துக்களை இனங்கண்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | களஞ்சியம் மற்றும் ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கின் கீழ் இருப்புக்கள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் சகல பிரிவுகளினாலும் பேணிச் செல்லப்படுகின்ற | | |

| | | | |
|---|---|---|---|
| | இருப்புக்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய காலத்தில் விநியோகிக்காமல் பேணிச் செல்வதன் மூலம் வருடாந்தம் இதற்காக பராமரிப்புக் கிரயத்தை செய்வதற்கும், களஞ்சியங்களில் இடவசதிகளை ஏற்படுத்துவதற்கும், இருப்பு பரீட்சிப்புக்களுக்காக ஊழியர் மற்றும் காலங்கள் அநாவசியமாக செலவிடப்படுகின்றமை, இருப்பு காலாவதியாதலுக்கு இடமளிக்கப்படுகின்ற மையால் அவற்றின் பெறுமதி குறைவடைந்தமை கீழே காண்பிக்கப்படுகின்றது. | | |
| (i) | ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கின் இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பில் ரூபா 21,058,352 பெறுமதியான இருப்பு | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள அந்த இருப்பு விடயங்கள் தற்போது காலாவதியாகாமையினால் நிறுவனத்தின் அவசர தேவைகளுக்காக அந்த இருப்பு விடயங்கள் களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளது. | இந்த சொத்துக்களை இனங்கண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | களஞ்சிய முற்பணக் கணக்கில் A பிரிவில் களஞ்சியத்தில் ரூபா 1,019,183 பெறுமதியான 152 விடயங்கள் | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள அந்த இருப்பு விடயங்கள் தற்போது காலாவதியாகின்றமையினால் நிறுவனத்தின் அவசர தேவைகளுக்காக அந்த இருப்பு விடயங்கள் களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளது. | இந்த சொத்துக்களை இனங்கண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | G(SP) பெறுமதியில் ரூபா 30,912 பெறுமதியான விடயங்கள் | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள அந்த இருப்பு விடயங்கள் தற்போது காலாவதியாகாமையினால் நிறுவனத்தின் அவசர தேவைகளுக்காக அந்த இருப்பு விடயங்கள் களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளது. | இந்த சொத்துக்களை இனங்கண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 770 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 380 ஆகும். அதன் பிரகாரம் 390 ஆன வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆட்சேர்ப்பு தொடர்பான நேர்முகப் பரீட்சை, செயல்முறைப் பரீட்சை நடாத்தி வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரித்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் சில பதவிகளுக்கு போட்டிப் பரீட்சை பெறுபேறுகளும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |